# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 14 ஆம் ஞாயிறு | 5 ஜூலை 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*



மாதாந்திர நோக்கம்:

சூழலியல் – நமது பொதுவான இல்லத்தைப் பராமரித்தல்



# படைப்புகளுக்கு அக்கறைக் காட்டுவதன் மூலம் கிறிஸ்துவின் பணியைப் பகிர்ந்துகொள்ளுதல்

இறைவாக்கினரான செக்கரியா, வல்லமையோடும் ஆடம்பரத்தோடும் அல்ல, மாறாகத் தாழ்மையுடன் கழுதையின் மேல் ஏறி எருசலேமுக்குள் நுழையும் ஒரு மெசியாவின் வருகையை முன்னறிவித்தார். இந்த இறைவாக்கு மத்தேயு நற்செய்தியில் (21:1-11) நிறைவேறுகிறது, அங்கு இயேசு தம்மை அமைதியின் அரசராக வெளிப்படுத்துகிறார். அவர் பலத்தால் வெற்றி பெறுவதில் அல்ல; மாறாக எளிமை, இரக்கம் , மற்றும் அன்பின் மூலமே வெற்றி கொள்கிறார். அவருடைய தாழ்மையான நுழைவு இறைவழிகள் உலக வழிகளிலிருந்து வேறுபட்டவை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. உண்மையான மாட்சிமை, எளிமையிலும் பணிசெய்வதிலும் காணப்படுகிறது.

நற்செய்தியில், இயேசுவிடமிருந்து மற்றொரு அழகான அழைப்பை நாம் கேட்கிறோம். சில நேரத்திற்கு முன்புதான், அவருடைய அற்புதங்களைக் கண்டிருந்தும் மனந்திரும்ப மறுத்த நகரங்களை அவர் கண்டித்தார். ஆயினும், தாழ்மையுள்ள மற்றும் திறந்த மனதுடையவர்களை நோக்கித் திரும்பும்போது அவருடைய குரலின் தொனி மென்மையடைகிறது. பெருமையுள்ளவர்களுக்கும் தற்பெருமை உடையவர்களுக்கும் அல்லாமல், எளிமையான, நம்பிக்கையுள்ள மற்றும் தாழ்மையானவர்களுக்கே விண்ணரசின் மறையுண்மைகளை வெளிப்படுத்தியதற்காக இயேசு தந்தையைப் புகழ்கிறார். இவர்கள் தான் தந்தையை மகிழ்ச்சிப்படுத்துபவர்கள் மற்றும் அவருடைய அருளுக்குத் திறந்த மனதுடையவர்கள்.

பின்னர் இயேசு, பெருஞ்சுமை சோர்ந்திருப்பவர்களைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார், "எல்லாரும் என்னிடம் வாருங்கள்" அவர் நம்மை வற்புறுத்தவோ அல்லது கோரிக்கைகளால் சுமையாக்கவோ இல்லை. மாறாக மென்மையாகத் தம்மோடு ஒரு உறவுக்குள் அழைக்கிறார். அவர் கனிவும் மனத்தாழ்மையும் உடையவர் என்று நமக்கு உறுதியளித்து, தம்முடைய நுகத்தை ஏற்றுக்கொண்டு அவரிடமிருந்து கற்றுக்கொள்ளும்படி நம்மிடம் கேட்கிறார். அவரைப் பின்பற்றுவதன் மூலம், நாம் நமது சுதந்திரத்தை இழப்பதில்லை; மாறாக, அவருடைய பணியில் பங்கு பெறுவதன் மூலம் ஆன்மீக இளைப்பாறுதலைக் காண்கிறோம்.

இந்த அழைப்பு, சூழலியல் மற்றும் நமது பொதுவான இல்லத்தைப் பராமரித்தல் ஆகியவற்றில் நாம் இந்த மாதத்தில் கவனம் செலுத்தி, ஆழமாக பிரதிபலிக்க நம்மை அழைக்கிறது. படைப்புடன் இணக்கமாக வாழ வேண்டுமானால், கனிவும் மனத்தாழ்மையும் நிறைந்த இதயம் அவசியமாகிறது. தனிப்பட்ட ஆதாயத்திற்காக பூமியைச் சுரண்டும் ஆணவமும், சுயநலமும் கிறிஸ்துவின் ஆவிக்கு முரணானவை. படைப்பைப் பராமரிப்பது ஒரு விருப்பத் தேர்வு அல்ல, மாறாக அது நமது கிறிஸ்தவ அழைப்பின் ஒரு பகுதி என்று திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவூட்டுகிறார். நாம் வீண்விரயத்தை தவிர்த்து, இயற்கையை மதித்து, அனைத்து உயிரினங்களின் கண்ணியத்தையும் பாதுகாக்கும்போது, கடவுள் படைத்த உலகத்தின் மீதான அவரது அன்பான பராமரிப்பில் நாமும் பங்கு கொள்கிறோம்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் நாம் ஊனியல்பின்படி அல்ல, ஆவிக்குரிய இயல்பின்படி வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்று நமக்கு நினைவூட்டுகிறார். தூய ஆவியார் நம்மை சுயநலத்திலிருந்து விலக்கி, வாழ்வு, புதுப்பித்தல் மற்றும் கடவுளுடனான ஒன்றிப்பை நோக்கி வழிநடத்துகிறார். கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், கடவுளின் பார்வையில் தாழ்மையுடன் நிலைத்திருக்கவும், படைப்புகளைப் பொறுப்புடன் பராமரிக்கவும், உலகிற்கு அமைதியையும், எதிர்நோக்கையும் கொண்டுவரும் ஒன்றித்துப் பயணிக்கும் மற்றும் இறைவாக்குரைக்கும் திருஅவையாக ஒன்றிணைந்து நடக்கவும் மன்றாடுவோம். ✣

## இன்றைய இறைவார்த்தை:

**செக்கரியா 9:9-10**
**திருப்பாடல் 145: 1-2, 8-11, 13-14**
**உரோமையர் 8: 9, 11-13**
**மத்தேயு 11: 25-30**

## இடமாற்றம் குறித்த அறிவிப்பு

உயர்மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் (API) சீரமைப்புப் பணிகள் நடைபெறவிருப்பதால் எதிர்வரும் ஜூலை 15, 2026 முதல் மேய்ப்புப்பணி மையத்தில் (APC) அமைந்திருக்கும் அலுவலகம் கோலாலம்பூர் , ஜலான் பீல், திரு இருதய ஆண்டவரின் ஆலய வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கிறது என்பதைத் தெவிரித்துக்கொள்கிறோம். இந்த இடமாற்றம் மறுஅறிவிப்பு வரும்வரை நடைமுறையில் இருக்கும்.

கூடுதல் விவரங்களுக்கு:
தொலைபேசி எண்:
**016-366 9461**

INTERNAL CIRCULATION ONLY
BUL 27/2026

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org